செ.(கு).எண்: 179 நாள்: 10.11.2011.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 10.11.2011

சென்னை, அடையாறு, தாமோதரபுரத்தைச் சேர்ந்த திரு. சந்தானம் என்பவரின் மகன் முன்னாள் இராணுவ வீரர் திரு. வெங்கடேசன் என்பவர் **9.11.2011** அன்று அதிகாலை சேமியர்ஸ் சாலை – டி.டி.கே சாலை சந்திப்பில் ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த திரு. வெங்கடேசனின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் காலமான முன்னாள் ராணுவ வீரர் திரு. வெங்கடேசனின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9